சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 15/2019

2023 ம் ஆண்டு **22.09.2023** ம் தேதி மனோபாரதி

என்பவரின் சாட்சியாகிய மசா 2 ன் வாக்குமூலம்

(1969 ம் ஆண்டில் 44–வது பிரிவின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்கள் முன்னிலையில், சார்பு நீதிமன்ற இளநிலை உதவியாளர் திரு.எம்.குமரலிங்கம் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மனோபாரதி | தாலூக்கா | வால்பாறை |
| க.பெ. (அ) த.பெ. | வனராஜன் | சமயம் | இந்து |
| கிராமம் | வால்பாறை | வயது | 34 |

முதல் விசாரணை

நான் எம்.சி.ஓ.பி. எண் 16/2019 மனுவின் மனுதாரர். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் தரப்பு ஆவணங்களாக

1.மசாஆ 13 – எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது),

2.மசாஆ 14 – எனது பான் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது),

3.மசாஆ 15 – எனது வங்கிக் கணக்குப் புத்தகம் நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது),

எனவே எனது தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

## 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தில் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது

காயச்சான்று எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் எனக்கு இழப்பீட்டுத் தொகை எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயம் மூன்று பேர் இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். நான் ஓட்டிச் சென்ற இரு சக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். விபத்து என் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும்தான் ஏற்பட்டது என்றாலும் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ ரோடு அகலமான ரோடு என்றாலும் நான் தள்ளிச் சென்றிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் இழப்பீட்டுத் தொகை அதிகம் என்றாலும் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. மூன்று பேர் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்வது மோட்டார் வாகனச்சட்டப்படி தவறு என்றாலும் அதனால் எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி